ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 65 — 1973 ජූනි 22 වැනි සිකුරාදා — 1973.06.22

65 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூன் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 605 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் . | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் . .. | 610 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | 611 |


*கவனிக்க.—இலங்கை நிதித்தாபனம் சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக் கப்பட்டுள்ளது.*

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### *இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி*

*இரத்மலானை, பிரதம இயந்திரப் பொறியியலாளர் காரியாலயத்திலிருக்கும் பித்தளைக் கழிவு பொருட்கள் யாவற்றையும் வாங்கி எடுத்துச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்களை சபைத் தலைவர், புகையிரதப் பகுதி விண்ணப்பச் சபை, தலைமை அதிபர் காரியாலயம், இ. அ. பு. தபால் பெட்டி 355, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி, புதன் கிழமை மு. ப. 11.00 மணி வரையும் அனுப்பலாம்.*

*2. விண்ணப்பம் செய்ய விரும்புவோர், விண்ணப்பம் செய்வதற்குமுன், தங்களால் இச்சேவையைச் சரிவரச் செய்ய முடியும் என்பதற்குரிய ஆதாரப் பத்திரங்களையும், பொருளாதார நிலைமையைக் குறிக்கும் பத்திரங்களையும், தேவையாயின் கொடுக்க வேண்டும்.*

*3. கொழும்பு 10, தபால் பெட்டி இல. 1347, புகையிரத பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று, இரண்டு பிரதிகளில் தங்கள் விண்ணபத்தை மனுச் செய்யவும்.*

*4. விண்ணப்பக் கட்டுப்பணம் ரூபா 250/- கட்டிய பற்றுச் சீட்டை ஒப்படைப்போருக்கு 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடுப்பகல் 12 மணிவரையும் விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படும். இலங்கை புகையிரதப் பகுதி, மருதானை, பிரதம கணக்காளர் கந்தோரில் அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள கச்சேரிகளில் விண்ணப்பக் கட்டுப் பணத்தைக் கட்டிக் கொள்ளலாம்.*

*5. 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை காலை 11.05 மணிக்கு, இலங்கை புகையிரத அதிபர் காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைத் திறக்கும் பொழுது, விண்ணப்பம் செய்தோர் சமுகம் அளிக்கலாம்.*

*6. புகையிரத பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலயத்தில் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.*

*எம். சறீன்,*
*தலைமை அதிபருக்காக,*
*இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி.*

*கொழும்பு, 31.5.73.*

6–715—22..06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

### *முக்கிய அறிவித்தல்*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்.*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

## வேலைப் பணிப்பாளர் அலுவலகம்

கலாவெவப் பிரிவு

கலாவெவப் பிரிவின் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் வடமத்திய பிரதேச வேலைப் பணிப்பாளர் அவர்கள் 1973 ம் ஆண்டு ஆடி மாதம் 6 ந் திகதி காலை 10.30 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை | கேள்விப்பத் திரக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மகாதிம்பிரிவெவா திருத்த வேலைகள் | 35,000 | 50 0 |
| பொறவெவா திருத்த வேலைகள் | 20,000 | 25 0 |
| கெடியுளாவெவா திருத்த வேலைகள் | 35,000 | 50 0 |
| வறுவெவா திருத்த வேலைகள் | 20,000 | 25 0 |

2. வேலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் மேல் கூறிய தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விப்பத்திரங்கள் மகாஇலுப்பள்ளத்தில் உள்ள கலா வெவப் பிரிவு–மரதன்கடவெலப் பிரிவு–கெக்கிராவப் பிரிவு ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1973 ஆடி மாதம் 3 ந் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது அலுவலகத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களேயும் அவற்றின் பெறுமதிகளேயும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோர்களில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்கள் கலாவெவ நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. இரகுநாதன்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்.
கலாவெவப் பிரிவு.

மகாஇலுப்பள்ளம,
1973 ம் ஆண்டு யூன் மீ 08 ந உ.

6–790—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வாகனங்களின் விற்பனை

*1 சிறி 245 (ஓபல் கப்பித்தான்),4 சிறி 5972 (டொயபெற்) என்ற இலக்கங்களேயுடைய வாகனங்களின் விற்பனைக்காக, பொறியிட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*இவ்வாகனங்களை அலுவலக நேரங்களில் கொழும்பு-2, யூனியன் பிளேஸ் 288 ம் இலக்கத்தில் பார்வையிடலாம்.*

*கொழும்பு-2, யூனியன் பிளேஸ் 288-ம் இலக்கத்தில் உள்ள எஞ்சினியரிங் பகுதியின் பிரதம எஞ்சினியரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் ஒவ்வொரு வாகனத்திற்குமாக, புறம்பான கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை உரொக்கப் பணமாக, அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தபடுவதன் மீது கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களுக்கு தபால் மூலம் வரும் கோரிக்கைகள், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய கடைசி நாளுக்கு ஆகக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர், பதிவுத் தபாலில் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.*

*அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கத்தரப்புக் கூட்டுத்தாபனங்கள், இலவச கொடுகடன் வசதிகளை அனுபவிக்கும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்/நிலையங்கள் வைப்புப் பணம் இன்றி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கலாம். அவைகள், கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது நிருபன இலக்கம்/சான்றிதழ் முதலியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.*

*கேள்விப் பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும் போது வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரம் அதற்கான கேள்விப்பத்திர வைப்புப்பணப் பற்றுச் சீட்டுடன், "இலக்க வாகனத்திற்கான கேள்விப் பத்திரம்" என்று இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட தபாலுறையில் உள்ளடக்கப் படவேண்டும். கேள்விப் பத்திரதாரரின் பெயரும் விலாசமும், தபாலுறையின் இடதுபக்க கீழ் மூலையிற் குறிப்பிடப்பட வேண்டும்.*

*பொது முகாமையாளர் (நிர்வாகம்), இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 267, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 என்ற விலாசமிடப்பட்டு, பதிவுத் தபாலில், முடிவுதேதிக்கும் நேரத்துக்கும் முன்னர், பொது முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*கேள்வி மதிப்புக்கள் தெளிவாக இலக்கங்களிலும், அத்துடன் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்களில் மாற்றம் அல்லது அழித்தல்கள் எவையும், கேள்விப்பத்திர தாரரினால், முதலெழுத்தொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் பொழுது கேள்விப்பத்திரதாரர்/அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திர தாரர்களின் பெயர்களும் குறிக்கப்பட்ட விகிதங்களும், அவை திறக்கப்பட்டவுடன் வாசிக்கப்படும்.*

*கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் தேதியிலிருந்து ஒருவார காலத்திற்கு, கேள்விப் பத்திரதாரர்கள் தங்கள் கேள்விமதிப்புக்களை, ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக, விட்டு வைக்க வேண்டும். கேள்விப்பத்திரதாரரினால், கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு தந்தி மூலம் அல்லது பதிவுத் தபாலில் அறிவிக்கப்பட்டிருக்கும் பொழுது அல்லது அவ் விலாசத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பொழுது அத்தகைய கேள்விப் பத்திரங்கள் தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.*

*கேள்விமதிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் கேள்விப் பத்திரதாரர்கள் மிகுதிப் பணத்தைச் செலுத்திவிட வேண்டும். மிகுதிப் பணம் செலுத்தி முடிந்த பின்னர், வாகனத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கும் கடிதம் கையளிக்கப்படும்.*

*எந்த ஒரு கேள்விப் பத்திரத்தையும் காரணம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உரிமை கொண்டிருக்கும்.*

*மேல் விவரங்களை, எஞ்சினியரிங் பகுதி, பிரதம எஞ்சினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*கேள்விப் பத்திரங்கள் 1973, யூன் 29 ஆம் தேதி பி. ப. 3.30 க்கு மூடப்படும்; அதற்குப் பின் உடனடியாக, கொழும்பு-2, யூனியன் பிளேஸ், 267 ஆம் இலக்கத்தில் உள்ள பொது முகாமையாளர் (நிர்வாகம்), அலுவலகத்தில் திறக்கப்படும்.*

*பொது முகாமையாளர் (நிர்வாகம்).*

*6-852—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65*

---

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

*உராய்வு நீக்கும் எண்ணெய்களை அடைத்துக் கொள்வதற்கு 1 இ. க. அளவு கொண்ட செவ்வகமான தகரங்களை தயாரித்துக் கொள்ளும் பொருட்டு தட்டையான தகரத்தகடுகளும் துணைக்கருவிகளும் கொண்ட 450,000 தொகுதிகளை வழங்குவதற்கான கேள்வி*

*மேற்கூறியவற்றை இறக்குமதி செய்து வழங்கிக் கொள்வதற்கான பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச்சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*கேள்வி நிபந்தனைகளும் விவரக்கூற்றுக்களும் மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூபா 100/- கொடுத்து பண்டசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*கேள்விகள் 1973 ஆம் ஆண்டு யூலாய் 06 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.*

*பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.*

*113, காலி வீதி,*
*கொழும்பு 3.*

*6-857—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65*

### இறப்பர்பொதிகளை ஏற்றிச்செல்லுதல்

304/1, மாத்தறை வீதி, மாகாலி, காலி என்ற இடத்திலிருக்கும் இத்திணைக்களத்தின் பொதிகள் கட்டும் நிலையத்திலிருந்து ஒவ்வொன்றும் 250 இறுத்தல் தாள் இறப்பரைக் கொண்ட பொதிகளை 1973 ஆம் ஆண்டு செத்தம்பர் 1 ம் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு ஓகஸ்த்து 31 ம் திகதி வரையுள்ள காலத்திற்கு காலி இறங்குதுறைக்கு லொறிமூலம் ஏற்றிச் செல்வதற்கான கேள்விகளை 10 அல்லது அதற்கும் அதிகமான லொறிகளையுடைய, போக்கு வரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1973 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் திகதி மு.ப. 10.00 மணிவரை, பொருள்கொள்வனவு திணைக்கள கேள்விப் பத்திர சபைத் தலைவர் பெற்றுக் கொள்வர்.

2. இறங்கு துறையில் இறப்பர் பொதிகளை கப்பலில் ஏற்றும் பொழுதும் இத்திணைக்களத்தின் போக்குவரத்து சேவை நடைபெறுதபொழுதும்தான் இப் போக்குவரத்து சேவை தேவைப்படும்.

3. பகலிலும், இரவிலும், எல்லா வேலை நாட்களிலும், பகிரங்க விடுமுறை நாட்களிலும், குறுகிய அறிவித்தலில் இப் போக்குவரத்து சேவையை மேற்கொள்ள தெரிவு செய்யப்படும் கேள்விப் பத்திரகாரர் தயாராயிருத்தல் வேண்டும்.

4. எந்த ஒரு அல்லது எல்லாக் கேள்வியையும், எந்தவித கேள்விக்கிடமுமின்றி நிராகரிக்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட கேள்வியை/கேள்விகளை முழு ஒருவருட காலத்திற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக் காலத்திற்கோ ஏற்கும் உரிமையை பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கென வைத்துள்ளார்.

5. மீளப் பெறக்கூடிய கேள்விப் பத்திர வைப்புப் பணமான ரூ. 100/- இன் மேல் இத்திணைக்களத்திற் பெறக்கூடிய படிவங்களில் இரட்டைப் பிரதியில் கேள்வியைக் குறிப்பிட்டு, பதிவுத்தபால் மூலம் பொருள் கொள்வனவுத் திணைக்களம், த. பெ. இல 147, 5 ஆவது தட்டு, வை.எம்.பீ.ஏ. கட்டடம், கொழும்பு 1 இல் இருக்கும் கேள்விப் பத்திர சபைத் தலைவருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். இன்றேல் 1973 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இத்திணைக்களத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் போடலாம். மேற்பக்க இடது கோடியில், "காலி பொதிகட்டும் நிலையத்திலிருந்து காலி இறங்கு துறைக்கு தாள் இறப்பர் பொதிகளை ஏற்றிச் செல்லுதற்கான கேள்விகள்" என தெளிவாக குறிப்பிட வேண்டும்.

6. பின்வரும் இரு வகைகளிலோ அன்றி அவற்றில் ஒரு வகையிலோ கேள்விகளை அனுப்பலாம். அவற்றில் ஒன்று மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அ. (i) காலி பொதிகட்டும் நிலையத்திலிருந்து காலி இறங்கு துறைக்கு 250 இறுத்தல் நிறை கொண்ட பொதியை ஏற்றிச் செல்வதற்கான வீதம்—

ரூ. ச..

(ii) கப்பலில் ஏற்றப்படாத சரக்கை திருப்பி ஏற்றிச் செல்ல நேரிடின் காலி இறங்கு துறையிலிருந்து காலி பொதி கட்டும் நிலையத்திற்கு 250 இறுத்தல் கொண்ட பொதியை திருப்பி ஏற்றிச் செல்வதற்கான வீதம்—

ரூ. ச.

(iii) கப்பலில் சரக்கு ஏற்றப்படாததின் நிமித்தம் ஒரு லொறி இறங்குதுறையில் தாமதிக்கும் காலத்திற்கு அந்த லொறிக்கு ஒரு மணித்தியாலத்திற்கான மேலதிக கூலி வீதம்—

ரூ. ச.

ஆ. (i) மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணிவரை காலி பொதிகட்டும் நிலையத்தில் ஒரு லொறியை சேவையிலீடுபடுத்துதற்கான வீதம்—

ரூ. ச.

(ii) பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணிவரை இறங்குதுறையில் ஒரு லொறி தாமதித்தால் ஒரு லொறிக்கு மணித்தியாலமொன்றிற்கான தாமதிப்புக் கூலி வீதம்—

ரூ. ச.

(iii) பி.ப. 8.00 மணி தொடக்கும் மறுநாள் மு.ப. 8.00 மணிவரை இறங்குதுறையில் ஒரு லொறி தாமதித்தால் ஒரு லொறிக்கு மணித்தியாலமொன்றிற்கு தாமதிப்புக் கூலி வீதம்—

ரூ. ச.

6. வது பந்தி அ(iii) ற்குரிய குறிப்பு

i. மேலதிக கூலி எனப்படுவது வழமையான துறைமுக நாமத்தைக் கருதுவதோ அன்றி அதனை உள்ளடக்கியதாகாது. மேலும் 'ஏற்றப்படாத சரக்கு' தொடர்பில் முறையே கப்பல் ஏஜென்றுகள் எத்தனை மணித்தியாலங்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கிறார்களோ அத்தனை மணித்தியாலங்களுக்கு மட்டும் தான் இந்த மேலதிக கூலி மட்டுப்படுத்தப்படும்.

ii. ஏற்றப்படாத சரக்கை இறங்கு துறையிலிருந்து காலி பொதி கட்டும் நிலையதிற்கு திருப்பி ஏற்றிச் செல்லுதற்கு மேலதிக கூலி எதுவும் கொடுபடமாட்டாது. திருப்பி ஏற்றிச் செல்லும் கூலி மட்டுமே கொடுபடும்.

7. 6 வது பந்தி (அ) இல் உள்ள நிபந்தனைகள் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து, மேற்குறித்த மேலதிக கூலியை விட வேறெந்த தரிப்புக் கூலியும் கொடுபடமாட்டாது.

8. அனுப்பப்படும் இறப்பரை ஏற்றிச் செல்லுங்கால் ஏற்படும் எந்தவித இழப்பினுலோ, சேதத்தினுலோ எழும் எந்த பணவுரிமைக் கோரிக்கைக்கும் தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பொறுப்பாவார்.

9. போக்குவரத்து சேவையை நடாத்தும் நோக்கத்திற்காக ரூ. 2,000/- ஐக் கொண்ட வங்கி உத்தரவாதமொன்றைக் கொடுத்து ஒப்பந்தமொன்றைச் செய்யுமாறு தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் வேண்டப்படுவார்.

10. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாட்கள் நஷ்ட ஈட்டுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் (117 ம் அத்தியாயம்) நிலையியல் சட்டதிருத்தங்களின்கீழ், அறிவித்தல்கள் அன்றி திருத்தங்களின் கீழோ, ஒப்பந்தகாரரின் பணியாட்களால், அன்றி அவர்கள் தொடர்பில் எழும் எந்தப் பணவுரிமையையும் தெரிவு செய்யப்படும் கேள்வியாளரோ ஈடு செய்து இத்திணைக்களத்தினை அப்பொறுப்பிலிருந்து விடுவித்தல் வேண்டும்.

11. இச்சேவையை நடாத்துதற்கு இலங்கைப் பிரசைகளாக உள்ள பணியாட்களையே வேலைக்கமர்த்தல் வேண்டும். எந்த ஒரு பணியாள் விரும்பத்தகாதவரென கருதுமிடத்து அவரை வேலைக்கமர்த்துவதை மறுக்கும் உரிமையை பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கென வைத்துள்ளார். அங்ஙனமே அப் பணியாளரை வேலைநீக்கம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் உடனேயே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

12. ஒப்பந்தம் செய்யப்பட்ட முழுக்காலத்திற்கும், ஏற்றிச் செல்லப்படவிருக்கும் சரக்கிற்கு, முழுக் காப்புறுதியை, தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பெற்றுக் கொள்ளவேண்டும்.

13. 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் மு. ப. 10.00 மணிக்கு வை. எம்.பீ.ஏ. கட்டடம், 5 ஆவது தட்டு, கொழும்பு 1 இல் இருக்கும் எனது அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வியாளர்கள் விரும்பினுல் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

14. வை.எம்.பீ.ஏ. கட்டடம், 5 ஆவது தட்டு, கொழும்பு 1 இல் இருக்கும் பொருள் கொள்வனவு ஆணையாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம். சி. சி. பர்ணந்து,
பொருள் கொள்வனவு ஆணையாளர்.

பொருள் கொள்வனவுத் திணைக்களம்,
த. பெ. இல. 147,
5 ஆவது தட்டு, வை. எம். பீ. ஏ. கட்டடம்,
கொழும்பு 1,
1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி.

6–846—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

களுத்துறை மின்தறி நெசவு நிலையத்தைப் பழுது பார்ப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச்சபைத் தலைவரால் 1973.7.12 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தின் கட்டிட வேலைக்கென ரூபா 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100/- ஐ வைப்புப் பணமாக இந்தத் திணைக்களத்திலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.7.11 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

தொடர் இல. 3/1—(1/52),
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹெமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.6.11.

6–792—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

றுவன்வெல மின்தறி வேலைக்களத்துக்கு தண்ணீர் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறு கைத்தொழிற்றிணைக்களம் கேள்விச்சபைத் தலைவரால் 1973.7.12 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தின் கட்டிட வேலைக்கென ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 25/- ஐ வைப்புப் பணமாக இந்தத் திணைக்களத்திலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.7.11 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

தொடர் இல. 3/1—(1/53),
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹெமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.6.11.

6–793—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

யக்கல மின்தறி வேலைக்களத்தில் கிணத்தையும் நீர்த்தொட்டியையும் சுற்றி முள்ளுக்கம்பி வேலியமைப்பதற்குரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹெமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் 1973.7.13 ந் தேதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் 2,500/- ரூபாவோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்களைப் பெற 1973.7.12 ந் தேதி நண்பகலோ, அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியேதினுமோ கேள்விக்கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1—(1/54),
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹெமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.06.13.

6–876—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1973 ம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி நண்பகல் 12 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) மடு முந்திரிகைச் செய்கைத் திட்டத்தில் பிரவேசப் பாதை "சீ—டி" (2 ம் பகுதி)

(2) மடு முந்திரிகைச் செய்கைத் திட்டத்தில் பிரவேசப் பாதை "ஈ—எவ்" (2 ம் பகுதி).

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1973 ம் ஆண்டு ஆனி மாதம் 28 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப் பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப் பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்ட வேண்டியதில்லை.

3. கேள்விப் பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1973 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி (29.6.73) நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் முந்திரிகைச் செய்கைத்திட்ட "ரோட்டு வேலை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப் பெற்ற கேள்விப் பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப் பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1973 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி (29.6.73) பிற்பகல் 12.05 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை அனுப்பியோர் சமூகந் தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும் வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழு வேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1973 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28 ந் திகதி.

6–800—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

தப்போவ, புத்தளம் மாவட்டங்களில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிக்கப்பட்டுள்ள பின்வரும் பிரதேசங்களில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்புரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை 06.07.1973 முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்ளுவார். இவ்வாறு துப்பரவு செய்தலில் களைதல், கட்டைபிடுங்கல், எரித்தல், மட்டமாக்குதல், வரம்பிடல், விரயமானவைகளை ஒதுக்குதல் முதலியன அடங்கும்.

| மாவட்டம் | திட்டம் | சரியான அளவு |
|---|---|---|
| புத்தளம் .. | தப்போவ .. | 250 ஏக்கர் |

2. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியால் அல்லது கச்சேரி நில அளவையாளரால் துப்பரவு செய்ய வேண்டிய துண்டுகளின் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாதிரிப்படத்திலும் நிலத்திலும் இத்துண்டுகளின் எல்லைகள் ஒருதரம் குறிக்கப்பட்டால் இவ்வெல்லைகளுக்குள்ள எல்லா வேலைகளும் செய்யப்படவேண்டும். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கான வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 100 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலாயின் எந்தவொரு கச்சேரியிலோ செலுத்தி 05.07.1973 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " தப்போவ—புத்தளம் மாவட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும், முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையிற் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாயின் பதிவு அஞ்சலினும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

5. கேள்விகள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மீளப்பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விகளை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 06.07.1973 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகம் கொடுக்கலாம்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட பிரிவிலுள்ள மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய ஒப்பந்தப் படிவத்தை கவனமாக வாசிப்பதுடன், தேவையாயின் கச்சேரியிலிருந்து அவசியமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

10. அரசாங்கமானது எல்லாக் கேள்விகளையும் அல்லது எந்தக் கேள்வியையும் தள்ளுபடி செய்யுமுரிமையையும் ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையும் தனக்கு எவ்வித ஐயப்பாடுமின்றி ஒதுக்கியுள்ளது.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபருடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

12. எந்த ஒப்பந்தமும் உரிய அதிகாரமின்றிப் பிறருக்குச் சாட்டுதல் செய்யப்படவோ அல்லது உபவாடகைக்கு விடப்படவோ ஆகாது. ஓர் ஒப்பந்தக்காரர் வேறெவருக்கேனும் தனது சார்பில் ஒப்பந்தத்தை நடாத்துமாறு அதிகாரமளிக்கும் தத்துவ உரிமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு ஒதுக்கியுள்ளது.

13. அரசாங்க அதிபர் ஆகியவர் தனக்குப் போதுமானதெனக் காணும் காரணங்களுக்காக, ஒப்பந்தகாரர் ஒருவர் வேலைக்கமர்த்தும் எவருக்கு மெதிராக மறுப்புத் தெரிவித்து எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய ஒருவரை ஒப்பந்தகாரர் வேலைக்கமர்த்தலாகாது.

14. முன்னர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்திராத ஒரு கேள்வியாளர் கேள்விப்படிவங்களுக்கு விண்ணப்பிக்கும்போது தனது முழுப் பெயர், நிரந்தர விலாசம், தனக்கு எந்த மாவட்டம் அல்லது மாவட்டங்களில் காணிச் சொத்து அல்லது சோந்தை இருக்கின்றது என்பதைக் கூறி ஓர் எழுத்துமூலக் கூற்றைப் படிவங்கள் வழங்கும் உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். காணியின் பரப்பளவும் பிறசோந்தைகளின் தன்மையும் பரப்பளவும் கொடுக்கப்படல் வேண்டும். வேறு எந்தத் திணைக்களத்துடனும் அரசாங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றியுள்ள கேள்வியாளர் ஒருவர் அத்திணைக்களத்தின் பெயரையும் எந்த மாவட்டத்தில் அச்சேவை செய்யப்பட்டதென்பதையுங் கூறல் வேண்டும்.

15. கேள்விக்காரர் பணங்கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கவேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

16. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

17. மேலதிகத் தகவல்கள் ஏதாவது வேண்டுமாயின் அவைகளைக் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உ. ஆ. குணரத்தின,
காணி அபிவிருத்தி அதிபர்.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973 ம் ௵ யூன் மீ 12 ந உ.
சீசீ/1/476

6–777—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிக்கப்பட்டுள்ள பின்வரும் பிரதேசங்களில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை 06.07.73 முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்ளுவார். இவ்வாறு துப்புரவு செய்தலில் களைதல், கட்டைபிடுங்கல், எரித்தல், மட்டமாக்குதல், வரம்பிடல், விரயமானவைகளை ஒதுக்குதல் முதலியன அடங்கும்.

| மாவட்டம் | திட்டம் | சரியான அளவு |
|---|---|---|
| அம்பாந்தோட்டை .. | முறுதவெல .. | 1,000 ஏக்கர் |

2. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியால் அல்லது கச்சேரி நில அளவையாளரால் துப்புரவு செய்ய வேண்டிய துண்டுகளின் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாதிரிப்படத்திலும் நிலத்திலும் இத்துண்டுகளின் எல்லைகள் ஒருதரம் குறிக்கப்பட்டால் இவ்வெல்லைகளுக்குள் எல்லா வேலைகளும் செய்யப்படவேண்டும். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கான வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 200 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலாயின் எந்தவொரு கச்சேரியிலோ செலுத்தி 05.07.1973 திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடுதுப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் " என கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற

முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும், முகவரியும் கடிய உறையின் இடதுபக்கக் கீழ் மூலேயில் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாயின் பதிவு அஞ்சலினும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

5. கேள்விகள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப்பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விகளை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து மூன்று மாதங் களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாத தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலிற் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 06.07.1973 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகம் கொடுக்கலாம்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட பிரிவிலுள்ள மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய ஒப்பந்தப் படிவத்தைக் கவனமாக வாசிப்பதுடன், தேவையாயின் கச்சேரியிலிருந்து அவசியமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

10. அரசாங்கமானது எல்லாக் கேள்விகளையும் அல்லது எந்தக் கேள்வியையும் தள்ளுபடி செய்யுமுரிமையையும் ஒருகேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையையும் தனக்கு எவ்வித ஐயப்பாடுமின்றி ஒதுக்கியுள்ளது.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபருடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

12. எந்த ஒப்பந்தமும் உரிய அதிகாரமின்றிப் பிறருக்குச் சாட்டுதல் செய்யப்படவோ அல்லது உபவாடகைக்கு விடப்படவோ ஆகாது. ஓர் ஒப்பந்தக்காரர் வேறெவருக்கேனும் தனது சார்பில் ஒப்பந்தத்தை நடாத்துமாறு அதிகாரமளிக்கும் தத்துவ உரிமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு ஒதுக்கியுள்ளது.

13. அரசாங்க அதிபர் ஆகியவர் தனக்குப் போதுமானதெனக் காணும் காரணங்களுக்காக, ஒப்பந்தகாரர் ஒருவர் வேலைக்கமர்த்தும் எவருக்கு மெதிராக மறுப்புத் தெரிவித்து எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கலாம், அத்தகைய ஒருவரை ஒப்பந்தகாரர் வேலைக்கமர்த்தலாகாது.

14. முன்னர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்திராத ஒரு கேள்வி யாளர் கேள்விப்படிவங்களுக்கு விண்ணப்பிக்கும்போது தனது முழுப் பெயர், நிரந்தர விலாசம், தனக்கு எந்த மாவட்டம் அல்லது மாவட்டங்களில் காணிச் சொத்து அல்லது சோந்தை இருக்கின்றது என்பதைக் கூறி ஓர் எழுத்துமூலக் கூற்றைப் படிவங்கள் வழங்கும் உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். காணியின் பரப்பளவும் பிற சோந்தைகளின் தன்மையும் பரப்பளவும் கொடுக்கப்படல் வேண்டும். வேறு எந்தத் திணைக்களத்துடனும் அரசாங்க ஒப்பந்தத்தை நிறை வேற்றியுள்ள கேள்வியாளர் ஒருவர் அத்திணைக்களத்தின் பெயரையும் எந்த மாவட்டத்தில் அச்சேவை செய்யப்பட்டதென்பதையும் கூறல் வேண்டும்.

15. கேள்விக்காரர் பணங்கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

16. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள் விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக் கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

17. மேலதிகத் தகவல்கள் ஏதாவது வேண்டுமாயின் அவைகளைக் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உ. ஆ. குணரத்தின,
காணி அபிவிருத்தி அதிபர்.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1.
1973 ம் ஆண்டு ஜூன் மீ 12 ந உ.
சிசீ/1/474

6-776—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

**தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்**
உபயோகிக்கத்தகாத பொருட்கள் பகிரங்க
ஏல விற்பனையில் விற்றல்

*அலுமாரி (உணவு பாதுகாக்கும்), சதுர மேசைகள்-16, ருக்கை-2, தட்டச்சு மேசை-10, கபினற்-5. பத்திரிகை ஸ்ரான்ட், கைக்கதிரை-17, அலுமாரி-2, சார்மனை கதிரை-2, சாதாரண கதிரை-51, பலகை லாச்சிகள்-1,823, சயிக்கிள் ஸ்ரான்ட், 30 லாச்சிகள் கொண்ட ராக்கை-4, கபட்-1, பெரிய மேசை-4, சாதாரண மேசை-6, ட்ருவற் போட்-2, கரம் போட்-1, கணித பெட்டி-17, தராசு-1, 50 அடி நீளமான ரேப் பெட்டி-9, 100 அடி நீளமான ரேப் பெட்டி-5, நிறுக்கும் படி செற்-4, துணிப் பைகள்-31, பில்ரர்-1 ஆகிய உப யோகிக்கத் தகாத பொருட்கள் கொழும்பு-7, 16/7 அல்பட் கிற சென்றிலுள்ள தொகைமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தில் 1973.07.06 ந் திகதி காலை 10 மணிக்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும். இப் பொருட்களை 1973.07.04 ந் திகதியிலிருந்து அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.*

இப் பொருட்களை ஏல விற்பனையில் வாங்குவோர் உடனடியாகப் பணத்தைச் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

எல். பி. ராஜகருணு,
தொகை மதிப்புப் புள்ளி விபர அதிபர்.

தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்,
6, அல்பட் கிறசென்ற்,
கொழும்பு 7,
1973.06.08.

6-770—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

# நானாவித அறிவித்தல்கள்

**இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றம்**

அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கான விசேட சன்மானங்கள்—1973

ஆராய்ச்சிக்கு விசேட மானியங்கள் அளிக்கும் உத்தேசத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களிடமிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்தும் பிற அமைப்புக்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அளிப்புகளின் நோக்கத்திற்காக பின்வரும் ஆய்வுப் பணித்துறைகள் மதிக்கப்படும் :—

(அ) கமத்தொழில் விஞ்ஞானம்.

(ஆ) எந்திரவியல் விஞ்ஞானம்.

(இ) மருத்துவ விஞ்ஞானம்.

(ஈ) சூழல்பற்றிய விஞ்ஞானம்.

(உ) உயிரியல் விஞ்ஞானம்.

(ஊ) இரசாயன விஞ்ஞானம்.

(எ) பௌதிக விஞ்ஞானம்.

(ஏ) கணித விஞ்ஞானம்.

(ஐ) சமூக விஞ்ஞானம்.

இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உதவிச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விசேட படிவங்களில் இணைப் படிகளில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களுக்கான கோரிக்கைகள் முத்திரையிடப்பட்ட 9"×4" அளவு உறைகளுடன் அனுப்பப்படல் வேண்டும். அந்நியச் செலாவணியெதுவும் வழங்கப்படமாட்டாது.

நாட்டின் உடனடியான பொருளாதார, சமூக நல மேம்பாட்டிற்குதவும் ஆராய்ச்சிக்ளை ஊக்குவிக்கவும் இவ்வாராய்ச்சிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பல்நெறி முறைப்பட்டதும் அமைப்புகள் ஒன்றிணைந்தியல்வதுமான அனுகலாற்றை ஊக்குதற்கு தனிப்பட்ட விஞ்ஞானிகளிடமிருந்தும் விஞ்ஞானிகளது ஆயங்களிடமிருந்தும் பின்வரும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இம்மன்றம் இத்திட்டங்களுக்கு அதி முதன்மை அளிக்கும் :—

(1) கொடித்தோடையிலும் பப்பாசியிலுமுள்ள வைரசுகளின் கட்டுப்பாடு.

(2) மனிதனின் மீது பூச்சிகொல்லிகளினதும் களைகொல்லிகளினதும் தாக்கம்.

(3) கடதாசியினதும் அதன் சார்பான உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தியின் விளைவாக சூழல் அழுக்கடைதலும் அதற்குத் தகுந்த பரிகார நடவடிக்கைகளும்.

(4) குடிசைக் கைத்தொழிலாக பாற்கட்டி உற்பத்தி.

(5) வரண்ட வலயத்தில் மழைவீழ்ச்சி மூலம் தரைநீர் மீள் வளப்பெருக்கம் மீதான படிப்பு.

(6) தானிய சேமிப்பும் பேணுகையும்.

(7) பழம், காய்கறிவகை சேமித்தலும் பேணுதலும்.

(8) தவிட்டில் இலிப்பேசுசார் தொழிற்பாடும் ஏவலகற்றலும்.

கீழே ஒப்பமிட்டவரிடம் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முனனர் கிடைக்குமாறு விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

செயலாளர் அதிபதி.

47/5, மெயிற்லண்ட் இடம்,
கொழும்பு-7.

௭—855—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூன்** | 1.6.73 | வெள்ளி | 23.5.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 30.5.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.6.73 | புதன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஒகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.